

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : சமாதானத்திற்கான பணி: அன்பும் கலந்துரையாடலும் முரண்பாடுகளை எப்பொழுதும் மேற்கொள்ள வேண்டுமென்று**

**நவம்பர் மாத கரு : கிறிஸ்துவில் புனிதத்துவத்திற்கு அழைப்பு**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| நவ 4 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ,த,ம) | பொதுக்காலம் 31ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 31ஆம் ஞாயிறு (புதுநன்மை 2018) |
| நவ 5 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| நவ 6 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| நவ 8 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| நவ 9 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு |
| நவ 10 சனி | காலை 6.30<br>மாலை 4.00 | திருப்பலி (ஆ)<br>திருமணம் (த) | புனித பெரிய லியோ<br>எட்ரியன் இம்மேனுவல் சுடேஷ் குணசேகரன் & ஷேர்லின் ஆரோக்கியம் |
| நவ 11 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>திருப்பலி (த) | பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 32ஆம் ஞாயிறு<br>புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், தாசேக் |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| நவ 6 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| நவ 7 புதன் | காலை 10.00<br>மாலை 8.00 | பெர். மை 1-1<br>பெர். மை 2-3 & 2-5 | மூத்தோர் பணிக்குழு மையக்குழு கூட்டம்<br>சீடத்துவ நிகழ்வு |
| நவ 8 வியா | மாலை 7.00<br>மாலை 7.45 - 9.15<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 2-1 & 2-2<br>பெர். மை 1-1 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA<br>கிறிஸ்துமஸ் பஜனை குழு கூட்டம் |
| நவ 9 வெள் | மாலை 8.00<br>மாலை 8.00 | ஜெலாப்பாங்<br>பெர். மை 1-1 | அருங்கொடை (த)<br>கிறிஸ்துமஸ் இசை இரவு 2018 கூட்டம் |
| நவ 10 சனி | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாயமாதா நவநாள் |
| நவ 11 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>காலை 10.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>பெர். மையம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>திருவருகைக்கால சிந்தனை - TUDM |

**28 அக் ~ 4 நவ 2018 வரை மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 11/11/18 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும்.**

2018 நவம்பர் மாத திருமணங்கள்

நவ 24 காலை 11.00 திருமணம் (த) நெல்சன் ராஜ் த/பெ ராஜமணி & நென்சி லெட்சுமி த/பெ ராமன்

நவ 24 மாலை 4.30 திருமணம் (த) மரிய தாஸ் த/பெ செல்வநாதன் & மெர்சி ரீத்தா த/பெ அந்தோணிசாமி

நவ 14 காலை 9.30 திருமணம் (த- திருச்சி, இந்தியா) ஜெராட் ராஜ் த/பெ மைக்கல் & பிரிசில்லா ஜெனித்தா மேரி

டிச 1 காலை 11.00 சடங்கு (த) அலெக்ஸ் வேளாங்கண்ணி த/பெ ஆரோக்கியசாமி & கோகிலவாணி த/பெ ஞானசேகரன்

டிச 1 மதியம் 2.00 திருமணம் (த) விக்டர் ஜோர்ஜ் த/பெ ஜோசப் & டோனரீத்தா த/பெ லாசரஸ்

டிச 1 மாலை 4.30 திருமணம் (த) கிரகோரி எட்வர்ட் த/பெ சந்தனதாஸ் & ஜீயன்னா ஏன் பிரேமாவதி த/பெ ராஜேந்திரன்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் அல்லது திருத்தொண்டரிடம் தெரிவியுங்கள்

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. நன்றி:** 2018 பங்கு மாநாட்டை தயார் செய்தவர்களுக்கும், கலந்துக்கொண்ட அனைவருக்கும் நன்றியும், மனமார்ந்த பாராட்டுகளும். 2019ன் கருத்து 'சகோதரத்துவம்'.

**2. தம்பூனில் பூக்கள் விற்பனை:** தம்பூன் கல்லறையில் பூக்கள் விற்பனையின்போது ஆதரவு அளித்த உங்களுக்கும், உங்களின் ஊக்கத்திற்கும் நன்றி!. ஏற்பாட்டுக்குழுவிற்கும் நன்றி!.

**3. பங்கு மண்டப மறுசீரமைப்பு:** லூர்து மண்டபத்தை மேம்படுத்தி முழுமையாக மறுசீரமைப்பு செய்துவிட்டோம். இது திருமண வரவேற்பு, நிச்சயதார்த்தம் மற்றும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் பொதுவானது. 2019க்கான பதிவுகள் இப்போதிலிருந்து தொடங்குகிறது. பதிவு செய்வதற்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**4. மாநாட்டின் விமர்சனம்:** இந்த அறிக்கைத்தாளின் வழியாக மாநாட்டில் எழுப்பப்பட்ட சில கேள்விகளை நான் சிறப்பித்துக் காட்டுகிறேன். மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விகளில் ஒன்று: ஏன் பங்கு திருவிழா நவநாள்களின் போது பங்கின் ஒற்றுமையை மேலும் பிரதிபலிக்கும் வகையில் ஒரே திருப்பலி மட்டும் இல்லை? பதில்: மறைப்போதனை நோக்கத்திற்காக பங்கு திருவிழாவின் போது நவநாள் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்துவ விசுவாசத்திற்கு பொருத்தமான ஒரு கருப்பொருளின் மீது கவனம் செலுத்துவதும் ஆன்மீக முதிர்ச்சியடையவும் இது ஒரு வாய்ப்பாகும். இந்த பங்கில் 5 திருவிழாக்கள் உள்ளன. முறையே: புனித லூர்து அன்னை, புனித செபஸ்தியார், அன்னை வேளாங்கண்ணி, புனித பிரான்சிஸ் அசிசி & கிறிஸ்து அரசர் திருவிழா. தமிழில் முக்கியமாக பங்கின் நவநாள் கொண்டாட்டம் உள்ளது. புனித லூர்து அன்னையின் திருவிழாவிற்கான நவநாள் **தமிழ்** மற்றும் **ஆங்கிலத்தில்** முடிவடைந்தது. இதுதான் நாம் மக்களுக்கு மறைக்கல்வியை கற்பிக்கக்கூடிய நேரம்.

**5. கிறிஸ்துமஸ் பஜனை 2018:** தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், அதிச தலைவர்கள் & துணைத் தலைவர்கள் 8 நவ 2018 (வியா) இரவு 8.00க்கு பெர். மை 1-1ல் நடைபெறும் கிறிஸ்துமஸ் பஜனை குழு கூட்டத்தில் கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள். பிரதிநிதிகள் இல்லை.

**6. கிறிஸ்துமஸ் இசை இரவு & பங்கு மண்டபம் ஆசீர்வதித்தல்:** கிறிஸ்துமசை முன்னிட்டு கிறிஸ்துமஸ் இசை இரவு நிகழ்ச்சியின் தலைப்பு "நெஞ்சுக்குள் பிறக்கவா" 22 டிச 2018 (சனி) மாலை 6.00க்கு பங்கு மண்டபத்தில் நடைபெறும் அதிஷ்ட கூப்பன்கள் ரிம 10/- (ஒரு புத்தகம்) 11 நவ 2018 ஞாயிறு முதல் திருப்பலிகளுக்கு பிறகு விற்கப்படும். இந்த நிகழ்வுக்கு நிதி அளிக்க பங்கு மக்கள் தயவு செய்து கூப்பன்களை வாங்கி ஆதரவு தாருங்கள். நமது ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் வருகை புரிந்து பங்கு மண்டபத்தை ஆசீர்வதிப்பார். வாருங்கள் ஒரு பங்கு சமூகமாக கிறிஸ்துமசை கொண்டாடுவோம்.

**7. மூத்தோர் பணிக்குழு:** அடுத்த ஒன்றுகூடுதல் 20 நவ 2018 (செவ்) காலை 9.30க்கு பெர். மையத்தில் திருப்பலியுடன் தொடங்கும். 60 வயதுக்கு மேற்பட்ட பங்கு மக்கள் கலந்துக்கொள்ள வரவேற்கப்படுகிறீர்கள்.

**8. ஞாயிற்றுகிழமைகளில் இறந்தவருக்கான திருப்பலிகள்:** திருவழிப்பாட்டின்படி இறந்தவருக்கான திருப்பலிகள் பொதுக்கால ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் அனுமதிக்கப்படும். திருவருகைக்காலம், தவக்காலம், புனித வாரம், கடன் திருநாட்கள் மற்றும் பெருவிழாக்காலங்களில் உள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் இறந்தவருக்கான திருப்பலிகள் அனுமதிக்கப்படாது.

**9. திருமண சடங்கிற்கான நற்கருணை:** இது ஆயர் மாநாட்டின் பொதுவான வழிமுறையாகும். நற்கருணை கத்தோலிக்க திருமண சடங்கிற்கு (கலப்பு திருமணம்/ வேறுபாடான சமய வழிபாடு) கொடுக்கப்படமாட்டாது. எனினும் நீங்கள் இந்த விதி விலக்கிற்காக ஆயரிடம் விண்ணப்பிக்க தேர்வு செய்யலாம். பினாங்கின் ஆயர் இதனை ஏற்றுக்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கும் உரிமை இருக்கிறது.

**10. சந்தா உறைகள்:** சந்தா உறைகளை எடுத்து பங்கிற்கு பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை 50% மக்கள் மட்டுமே செலுத்தியுள்ளபோதிலும், செலுத்தாமல் இருப்போர் தயவு செய்து உங்களின் வெறுமையான உறைகளை பங்கில் மீண்டும் ஒப்படைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் விநியோகிக்கப்பட்ட பட்டியலின்படி கணக்கறிக்கை செய்ய வேண்டியுள்ளது.

**11. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** நாள்: 17 நவம்பர் 2018 (சனி), நேரம்: மாலை 4.30 மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**12. அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய நிலவரம்:** ஈப்போ நகராண்மைக் கழகத்திடமிருந்து சிற்றாலயம் கட்டுவதற்கான அனுமதியை நாம் பெற்றுவிட்டோம். கட்டிட வரைபட திட்டத்தை நகராண்மைக் கழக அங்கீகாரத்திற்கு நாம் சமர்ப்பிப்போம். நமது இடம், சிற்றாலயம் கட்டுவதற்கு அரசாங்க உரிமை குடியிருப்பு அரசிதழ் (கெசட்டெட்) பதிவுப் பெற்றுள்ளது. 14/9/2018 வெள்ளியன்று நாம் இந்த பத்திரத்தை பெற்றுக் கொண்டோம்.

**13. வடக்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** வடக்கு திசை அதிச 11 நவ & 18 நவ (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள்.

**14. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி அக்டோபர் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **412,155.31** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **480,277.10** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

28/10/18 திருப்பலி வசூல்கள்: **காலை 7.00** - RM 827.30 **காலை 9.00** - RM 1,502.85 **மொத்தம்**- RM 2,330.15
**2018** - RM 635.00 **கல்லறை** - RM 1,391.55

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்